காரணத்தால் அங்கே விரைவில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா, எவ்வளவு காலத்தில் அது தொடங்கப்படும், எவ்வளவு முதலீட்டில் பணி நடைபெறும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகஸ்தீஸ்வரம் தாலுகா, நீண்டகரை, தீக்கிராமத்தில் சுமார் 13.63 ஏக்கர் பட்டா நிலமும், கல்குளம் தாலுகா கடியப்பட்டினம் கிராமத்தில் சுமார் 11.17 ஏக்கர் பட்டா நிலமும், மொத்தம் 24.80 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நில எடுப்புச் சட்டத்தின்கீழ், அரசின் நிருவாக ஒப்புதலுக்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்தால் ஒரு மாத காலத்திற்குள்ளாகவே நம்முடைய சிட்கோ மூலமாக அங்கே தொழிற்பேட்டை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

39—

கால்நடை மருத்துவமனை

***27723**—திரு. **ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்மலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்மலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்மலை கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று அமைச்சருடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வரப்பட்டுள்ளது. தென்மலையிலிருந்து கிழக்கே 15 கிலோமீட்டருக்கு அப்பாலும், மேல் பகுதியில் 15 கிலோமீட்டருக்கு மேற்கே உள்ள

2001 ஜனவரி 23]

பகுதியிலும் விவசாயிகளிடம், பசு மாடுகளும், எருமை மாடுகளும் நிறைய இருக்கின்றன. இந்த இடத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு-2000-2001 ஆண்டுக்கு புதிய கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் தொடங்குவதற்கு அரசால் நிதி ஒதுக்கப்படவில்லை. எனினும், திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி, வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல சிவகிரி என்ற ஊரில் கால்நடை மருத்துவமனையும், சிந்தாமணி என்ற இடத்தில் கால்நடை மருந்தகமும் மற்றும் வாசுதேவநல்லூர், நெற்கட்டும்செவல், முள்ளிக்குளம், விஸ்வநாதபேரி, இராயகிரி ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், ஆத்துவழி, பாறைப்பட்டி, வடமாபுரம், தேவிப்பட்டினம், திருமலாபுரம் ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் வினாவில் குறிப்பிட்டிருக்கின்ற தென்மலை கிராமத்தில் 25-7-2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் நடைபெற்று, அங்கே 2,352 கால்நடைகளுக்குச் சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் காலங்களில் அரசின் நிதிநிலைமை மற்றும் அந்த ஊரிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கால்நடை மருத்துவமனை தொடங்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

40—

நல வாரியம்

***10907—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—